முருகப்பெருமான் துணை

**மகான் வசிஷ்டமகரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.08.2023**, சனிக்கிழமை

1. சன்மார்க்க சங்கம் அமைத்து
சகலரும் ஞானம் தேறி
துன்பமில்லா வாழ்வை காண
தெய்வ வழிகாட்டும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது யாளிதிங்கள்
வரங்களென நவதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 09 ம் நாள், 26.08.2023, சனிக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசியதும் வசிஷ்டமகரிஷி யானும்
அகிலம் நன்மைபெற உரைப்பேன்
ஆசிதந்து காத்திடும் அரங்கன்
அகிலமதின் அனைத்துமகா ஞானிகளின்
4. ஞானிகளின் அம்சம் ஆகும்
நல்கியே அன்னதனால் நாங்கள்
ஞானியரின் வேண்டலுக்கிணங்கி
நல்லாசி தந்து துணையாக நின்று
5. நின்றுமே அரங்கன் பிரணவ
நீதி நெறிக் குடிலை காத்து
நன்றான ஞானம் தருகின்றோம்
நல்குபவர் வினை வெல்கின்றோம்
6. வெல்கின்றோம் அவர்கள் தேறிட
விரட்டி மாயை சலனமின்றி
வல்லமை கொண்ட அரங்கன்
வழிநடக்கும் சீடர்கள் ஆக்கி

7. ஆக்கியே சுத்த நெறிபட வாழ
அனுமதியும் ஆசியும் தந்து
தேக்கமின்றி வழிநடத்தி
தேசிகனை அனுகும் காலம்
8. காலமதில் அரங்கன் கரம்பட
கருணை கொண்டு தீட்சையாக
வாழ வைக்க மக்களுக்கு
வரம்தனை தந்து இறங்குகின்றோம்
9. இறங்கிவர இந்தவித அற்புதம்
இலக்கினை அரங்கன் அடைய
வரங்களாக சேர்ந்துள்ளோம்
வையகத்தார் அன்னதனால் அனுகி
10. அனுகி அகத்தியர் முதலான ஞானிகளை
அடையவேண்டுமா ஆசிபெற வேண்டுமா
அனுகி அரங்கன் திருவடிபற்ற
அனைத்தும் இலகுவாகும்
11. ஆகவே தரும ஞான வழியை
அரங்கனை பின்பற்றி வர
யுகமாற்றம் சடுதி நிகழும்
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—